DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case No. CC.208/2016**

**prosecution witness: DW-2**

| | | |
|---|---|---|
| Name | : | Caste |
| Fathers Name | : | calling |
| Village | : | Religion |
| Taluk | : | Age |

**Accused present.**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பஞ்சவர்ணம் | ஜாதி | : | |
| க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

<u>16.10.2024</u>

<u>முதல் விசாரணை:-</u>

எனக்கு நீதிமன்றததில் இருந்து வந்த அழைப்பாணை பெயரில் சாட்சியமளிக்கிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் ஜெரோமை தெரியும். அவர் இராமேஸ்வரம் ரோடு பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து வந்தார். 2015 காலகட்டத்தில் நான் இராமேஸ்வரம் 9 வது வார்டுஉறுப்பினராக இருந்தேன். இராமேஸ்வரம் ரோடு பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் தலைவராக பணி செய்து வந்தேன். அந்த காலகட்டத்தில் நான் 12.06.2015 தேதி புகார்தாரர் ஜெரோம் மீது DEO, AEO வுக்கு புகார் மனு அனுப்பியிருந்தேன். என்னிடம் காட்டப்படுவதுதான் அந்த புகார் மனு. அது **எ.சா.ஆ.14** ஆகும். அந்த மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த மனுவில் நான் உட்பட செயற்குழு உறுப்பினர் ராஜேந்திரன், தனபால், பார்வதி ஆகியோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள். அந்த மனுவில் இராமேஸ்வரம் ரோடு பள்ளியில் பட்டதாரி ஆசிரியர் ஜெரோம் என்பவரது தகாத செயல்களால் பள்ளியில் கல்வி மற்றும் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது என அனுப்பியுள்ளேன். அதில் ஜெரோம் ஆசிரியர் மீது மொத்தம் 11 குற்றச்சாட்டுகள் சொல்லியுள்ளேன். அந்த மனுவில் பள்ளி மாணவர், மாணவியர்கள், ஆசியர்களிடமும் தகாத முறையில் நடந்து கொள்வதாகவும், AEO, DEO வின் உத்தரவை மதிக்கவில்லை என சொல்லப்பட்டுள்ளது. ஜெரோம் ஆசிரியல் செயல்களால் பள்ளி மாணவ, மாணவியரின் பெற்றோர்களை நான் சமாதனப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.10.16 15:54:28 +0530